# முத்தமிழாயம் வழங்கும் இலக்கியப்பதாகை (பறப்பு:4)




“கடவுள் விண்ணிலுமில்லை,
மண்ணிலுமில்லை
உள்ளத்தில்தான் இருக்கிறான்.
அவனை மக்களுக்குச்
செய்யும் சேவை மூலம் அறிய
விரும்புகிறேன்”

என்ற காந்தியடிகளின் வாக்கிற்கு இலக்கணமாகவும், இலக்கியச்சேவை, அறச்சேவைகளுக்கு எடுத்துக்காட்டாய் விளங்கும் ந.மணிமொழியனாரின் நினைவாக, விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு உட்பட்ட ஆறுபடை வீடு தொழில்நுட்ப வளாகம் - கலை மற்றும் அறிவியல் புலத்தின் சார்பில் நான்காம் நிகழ்வாக ஜீலை-20 ஆம் தேதி இலக்கியப்பதாகை (பறப்பு-4) நிகழ்வு நடந்தேறியது.



கவிஞர்கள் இறப்பதில்லை, அவர்கள் கவிதைகள் மூலம் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். பாரதி தொடங்கி, வைரமுத்து, வாலி, மேத்தாஎன புதுக்கவிதை எழுதுவோர் வரை அவர்களின் கவிதைகளைக் கூறி "கவிஞர்களும் கவிதைகளும்" என்ற தலைப்பில் கவிஞர் கு.மா.பா.கபிலன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். அவரின் தந்தையார் கு.மா.பாலசுப்பிரமணியம் எழுதிய திரைப்படப்பாடல்கள் மரபுக்கவிதையாக உள்ளது பற்றிக் கூறியும்இசையோடு பாடியும், மாணவர்களுக்கு உற்சாகமூட்டினார்.

ஹைக்கூ கவிதைகள், சென்ரியூ கவிதைகள் போன்றவற்றைக் கூறி மாணவர்களை "நிலா" என்ற தலைப்பில் கவிதைகள் படைக்க கூறினார். கவிதை என்பது என்ன? அதன் பல்வேறு வடிவங்கள் எவை? எவை? கவிதையினால் கவிஞன் அடையும் உணர்வுகள் எவ்வாறு? என்று பலதரப்பட்ட கோணங்களில் கவிதைகள், கவிஞர்கள் பற்றி எடுத்துரைத்தார். மாணவர்கள் ஆர்வமுடன் கேட்டனர்.

தலைமை உரையினை முதன்மை கல்வி அதிகாரி முனைவர் மு.பொன்ன வைக்கோ அவர்கள் வழங்கினார். முனைவர்.ஆர்.சண்முகவள்ளி (இயக்குநர்) கலை மற்றும் அறிவியல் புலம் அவர்கள் முன்னிலை வகித்தார். கு.மா.பா.கபிலன் பற்றிய அறிமுக உரையினை முனைவர் ப.ஜெயபாரதி (தமிழ்த்துறை தலைவர்) அவர்கள் வழங்கினார். தமது வாழ்த்துக்களையும், ஆசிகளையும், ஆதரவையும் மேதகு டாக்டர்.அ.ச.கணேசன் (வேந்தர்), டாக்டர் அனுராதா கணேசன் (இயக்குநர்) அவர்கள் அளித்தனர்.

வரவேற்புரையினை மாணவ தலைவர் சஞ்சனாவும், நன்றியுரையை மாணவன் அஜீத்குமார் வழங்கினார்.

தமிழ்த்துறை சார்பில் முனைவர் ப.ஜெயபாரதி (துறைத்தலைவர்), திரு. அ.முத்துக்குமார் (உதவிப்பேராசிரியர்) ஆகியோர் விழா ஏற்பாடு செய்துயிருந்தனர்.

இவ்விழா, மாணவ மாணவியர்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள், மற்றும் அனைத்து துறை சார்ந்த பேராசிரிய பெருமக்களின் ஆதரவுடன் இனிதே நிறைவு பெற்றது.






INSTITUTE OF TECHNOLOGY
An Ambit Institution of


VISION • WISDOM • UNITY





~~~~~*****~~~~~
~~~~~